# சிங்கள இளையோர்களே, நினைவேந்தும் உரித்தை நிலைநாட்ட துணை செய்யுங்கள்!

## நாடாளுமன்றில் சிறீதரன் எம்.பி கோரிக்கை



ஈழத்தமிழர்களின் நெடுங்கால மரபுகளின்வழி இம்முறையும், இனிவரும் காலங்களிலும் எமது உறவுகள் புதைக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று விளக்கேற்றி, மலர்தூவி, கண்ணீர் சிந்தி, வழிபடுவதன் மூலம் எங்களை நாங்களே ஆற்றுப்படுத்திக் கொள்கின்ற நினைவேந்தல் நிகழ்வுகளை, இராணுவத் தலையீடுகளோ, பொலிசாரின் அச்சுறுத்தல்களோ அற்று அமைதியான வழியில் கடைப்பிடிப்பதற்கு வழிவகை செய்வதன் மூலம் இந்த நாட்டில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த முன்வாருங்கள், என்று சிங்கள இளையோரை முன்னிறுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இன்றையதினம் நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்ட அவர், தமிழ்த்தேசிய மாவீரர் நாள் நெருங்கியிருக்கும் இந்தக் காலப்பகுதியில் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசங்களில் அதிகரிக்கப்பட்டிருக்கும் இராணுவக் கெடுபிடிகள் குறித்து உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

2015 ஆம் ஆண்டு ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் 2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 08 வெள்ளிக்கிழமை 24.11.2023 கதிர் 120

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
Poo Aadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்




# மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க முயற்சித்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை நினைவுகூரும்வகையில்மாவீரர்தினத்தை அனுஷ்டிக்க முயற்சிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர்மற்றும்பயங்கரவாதப்புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் ஆகியோர் மாவீரர் தினத்தை கொண்டாடும் நபர்களுக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இன்றையதினம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் உறுதியளித்தனர்.

பொலிஸ்மா அதிபர் மற்றும் சட்டமா அதிபர் சார்பில் அரச சிரேஷ்ட சட்டத்தரணி ஷமிந்த விக்கிரம இந்த உறுதிமொழியை வழங்கினார்.

நவம்பர் 27 ஆம் திகதி முதல் வடக்கு மற்றும் கிழக்கில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள மாவீரர் தின நிகழ்வுகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை 2 ➤

## மாவீரர் தின நினைவேந்தலுக்கு பொருட்கள் சேகரிப்புக் கூடம்

மாவீரர் தினத்தில் தமிழ் மக்களின் கூட்டுணர்வையும் கூட்டுரிமையையும் வெளிப்படுத்தும்

வகையில் நினைவேந்தலுக்குத் தேவையான பொருட்களைச் சேகரிப்பதற்கான கூடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் அமைக்கப்பட்டுள்ளது.

நினைவேந்தலுக்குத் தேவையான கற்பூரம், எண்ணெய், சுட்டி, திரி என்பவற்றை நவம்பர் 27 ஆம் திகதி வரை தினமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயில் அருகில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள சேகரிப்புக் கூடத்தில் வழங்க முடியும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (01)

## யாழ். பல்கலை மருத்துவபீடத்தின் புதிய கட்டிடம் விரைவில் திறப்பு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்காக யாழ் நகரில் புதிதாகக் கட்டப்பட்ட எட்டு மாடிகளைக் கொண்ட கட்டிடம் உத்தியோகபூர்வமாக விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

புதிய கட்டடத்திற்கான "சாந்தி பூசை" நேற்று நடைபெற்றதாடு, இன்று சமய சம்பிரதாயபூர்வமாக கட்டிடத்தில் பால் காய்ச்சப்பட்டது.

இதன்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சி.சிறீசற்குணராஜா, பல்கலைக்கழகப் பீடாதிபதிகள், யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர், மருத்துவ பீடத்தின் கல்விப் பணியாளர்கள், ஆலோசகர்கள் உட்பட பல்வேறு முக்கியஸ்தர்கள் பிரசன்னமாகியிருந்தனர். (01)

## 2022(23) உயர்தரப் பரீட்சையின் மறு ஆய்வு முடிவுகள் வெளியாகின

2022(23) உயர்தரப் பரீட்சையின் மறு ஆய்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர விடுத்துள்ள ஊடக 2 ➤

## முல்லைத்தீவில் மீனவர்கள் கவனவீர்ப்புப் போராட்டம்!




முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இன்று 2 ➤

## இன்று முதல் மழை குறைவடையும்!

இன்று முதல் மழை குறைவடையும் சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதனிடையே, 10 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை இன்று மாலை வரை மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி பதுளை, கண்டி, கேகாலை, மாத்தறை இரத்தினபுரி, கம்பஹா, ஹம்பாந்தோட்டை, குருநாகல், மாத்தளை மற்றும் நுவரெலியா 2 ➤

## சிங்கள இளையோர்களே, ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுவரப்பட்ட நிலைமாறுகால நீதிப் பொறிமுறையை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டதற்கமைய, ஈழத்தமிழர்கள், இனவிடுதலைக்காக உயிர்துறந்த தமது பிள்ளைகள் விதைக்கப்பட்ட விளைநிலங்களான துயிலும் இல்லங்களுக்குச் சென்று நினைவேந்தும் உரிமையை நிலைநிறுத்தத் தொடங்கியிருந்தார்கள்.

ஆனால், தமது உறவுகளை இழந்து துயருறுகின்ற நெஞ்சம் எவ்வாறு இருக்கும் என்பதை உணரத் தலைப்படாத அதிகாரக்கரங்கள், அடிப்படை மனிதாபிமான உணர்வுகளைக் கூடப் புறந்தள்ளி, இன்னுமின்னும் எங்கள் மக்களை வஞ்சிக்கும் செயற்பாட்டையே மிகக் கச்சிதமாக மேற்கொண்டு வருகின்றன.

இனி ஒருபோதும் போரொன்றை விரும்பாத எமது மக்கள், பயங்கரவாதம் எனப்படுகின்ற இயல்புகளுக்கு ஒத்திசையாத வகையில் தங்களின் பிள்ளைகளை, அவர்கள் புதைக்கப்பட்ட நிலங்களில் சென்று வழிபடுவதற்கும், விளக்கேற்றுவதற்கும், கண்ணீர்விட்டு அழுவதற்குமான சந்தர்ப்பங்களைத் தடுக்கும் வகையில் அச்சுறுத்தல்களும் விசாரணைகளும் பரவலாக அரங்கேற்றப்படுகின்றன.

போர் முடிவுற்று பதின்மூன்று ஆண்டுகள் நிரம்பிய பின்னரும், வடக்கு, கிழக்கிலுள்ள 27 மாவீரர் துயிலும் இல்லங்களில், யாழ்ப்பாண மாவட்டத்தின் கொடிகாமம், எள்ளங்குளம், கோப்பாய் ஆகிய துயிலும் இல்லங்கள், கிளிநொச்சி மாவட்டத்தின் தேராவில் துயிலும் இல்லம், முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை, ஆலங்குளம், அளம்பில், நெடுங்கேணி களிக்காடு, மற்றும் மணலாறிலுள்ள உதயபீடம், கோடாலிக்கல் புனிதபூமி ஆகிய துயிலும் இல்லங்கள், வவுனியா ஈச்சங்குளம் துயிலும் இல்லம், மட்டக்களப்பு தாண்டியடி துயிலும் இல்லம் ஆகிய பன்னிரண்டு மாவீரர் துயிலும் இல்லங்கள் இன்றுவரை இராணுவப் படை முகாம்களாக முற்றுகையிடப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் தேராவில் துயிலும் இல்லத்தை விடுவிக்கக் கோரி கடந்த 2023.11.11 ஆம் திகதி பொதுமக்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் ஏற்பாட்டில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு சூழலில், தமது பிள்ளைகளின் கல்லறைகள் அத்தனையும் போரியல் மாண்புக்குப் புறம்பான வகையில் இடித்தும், பெயர்த்தும் அழிக்கப்பட்ட பின்னரும், அந்தக் கல்லறைகள் நிறைந்திருந்த துயிலும் இல்லங்களைத் தமது புனித பூமியாக எண்ணியே தமிழர்கள் இன்றளவும் பூசிக்கிறார்கள்.

திரும்பும் திசையெல்லாம் ஆக்கிரமிப்பின் கால்கள் ஆழ வேரூன்றிப் போயிருக்கும் தமிழர் தாயகத்தில், இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட துயிலும் இல்லங்கள் மீதான ஆக்கிரமிப்பும், வழிபாட்டுரிமை மீதான தடையும் மீளவும் வலிந்து ஏற்படுத்தப்படக்கூடும் என்ற அடிப்படையில், மக்களிடையே ஆழப்பதிந்திருக்கும் அரசு மீதான நம்பிக்கையீனமும், துயிலும் இல்லத்தின் புனிதத்துவத்தைப் பாதுகாக்க வேண்டுமென்பதில் அவர்களுக்கிருக்கும் ஆத்ம எதிர்பார்ப்பும், அத்துயிலும் இல்ல வளாகங்களை எல்லைப்படுத்துவதிலும் அலங்கரிப்பதிலும் ஆர்வத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

அத்தகைய மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைய, காலத்தின் தேவை கருதியும் துயிலும் இல்ல மரபுகளுக்கமையவும் கனகபுரம், முழங்காவில், வன்னிவிளாங்குளம் ஆகிய மூன்று துயிலும் இல்லங்களினதும் நுழைவாயில் முகப்புகளை, அரை நிரந்தரமானவையாக நிறுவியிருக்கிறோம்.

எமக்கெதிராக அரசு பூசமுற்படுகின்ற பயங்கரவாத முலாம் குறித்த எந்தக் குறியீடுகளும் அவற்றில் காட்சிப்படுத்தப்படவில்லை. ஆனால், போரை நினைவுபடுத்துகின்ற, நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கின்ற எந்தவொரு அடையாளங்களும் இல்லாத வெற்று முகப்புகளை நிறுவியமைக்காக, இதுவரை நான் உட்பட பதின்மூன்று பேர் பொலிசாரால் தனித்தனியே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளோம்.

தமிழர்களின் பூர்வீக மண்ணை ஆக்கிரமித்து, நூறு வீதம் தமிழ் மக்களின் புழக்கம் செறிவாக உள்ள தமிழர் தாயகப் பகுதிகளின் பெருநகரங்களிலும், பிரதான வீதிகளிலும் ஏராளமான போர் வெற்றிச் சின்னங்கள் நிரந்தரமாக நிறுவப்பட்டுள்ளன.

குறிப்பாக கிளிநொச்சி நகர மத்தியில், டிப்போச்சந்திக்கும் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்துக்கும் அருகேயுள்ள சந்திரன் பூங்கா வளாகத்தில், தமிழர்களின் இதயங்களைத் துளைத்து உள்நுழைவதான தோற்றப்பாட்டை வெளிப்படுத்தும், துப்பாக்கிச் சன்னம் ஒன்றுடனான போர் வெற்றிச் சின்னமும், ஆனையிறவுப் பகுதியில் ஏ9 பிரதான வீதியின் இருமருங்கும், இருவேறு போர் வெற்றிச் சின்னங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இலங்கையைத் தாங்கி நிற்கும் வலிந்த கரங்கள் ஒருபுறமும், இராணுவச் சிப்பாய் ஒருவரின் இராணுவச் சீருடையுடனான உருவச்சிலை ஒருபுறமும் நிறுவப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் ஏ35 பிரதான வீதியின் ஒருமருங்கில், ஆயுதம் தரித்த இராணுவச் சீருடை, சிங்கக்கொடி, துப்பாக்கி என்பவற்றை ஏந்தியவாறு வெற்றிக்களிப்பில் மிதக்கும் இராணுவச் சிப்பாய் ஒருவரது உருவச்சிலை நிறுவப்பட்டிருக்கிறது.

அடிப்படை உரித்துக்கோரிப் போராடிய ஓர் இனத்தைத் தோற்கடித்துவிட்டோம் என்கிற மமதையையும், போரின் குரூரத்தையும், படையினரது ஆக்கிரமிப்புச் சிந்தையையும் முகத்திலறைந்தாற் போல் பிரதிபலிக்கும் ஆயுத கலாசார நினைவுச்சின்னங்கள் சீர்குலைக்காத இன நல்லிணக்கத்தை, அவை நினைவுபடுத்தாத போரியல் உணர்வுகளை, நினைவேந்தல் உரித்தை நிலைநாட்டுவதற்காக அமைத்த துயிலும் இல்ல முகப்புகள் சீர்குலைக்கும் என்று சிந்திப்பது கூட ஆக்கிரமிப்பின் அதியுச்ச வெளிப்பாடாகவே தென்படுகிறது, என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தனது உரையில் குறிப்பிட்டார்.

இதன்போது, தேராவில் துயிலும் இல்ல விடுவிப்புத் தொடர்பான ஆர்ப்பாட்டத்தின்போது கையளிக்கப்பட்ட மகஜரின் பிரதியும், புதிதாக நிறுவப்பட்டுள்ள துயிலும் இல்ல முகப்பின் நிழற்படமும், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள இராணுவ நினைவுச் சின்னங்களின் புகைப்படங்களும் சபாபீடத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டதோடு நாடாளுமன்றிலும் காட்சிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (02)

## இன்று முதல் மழை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டங்களின் சில பிரதேச செயலக பிரிவுகளுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கையே தற்போது நீடிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 2022(23) உயர்தரப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையில், மறுபரிசீலனை செய்யப்பட்ட பெறுபேறுகளைப் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளங்களான www.doenets.lk/ www.results.exams.gov.lk ஆகியவற்றின் ஊடாகப் பார்வையிட முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

பரீட்சைப் பெறுபேறுகளை மீள்பரிசீலனை செய்வதற்காக பரீட்சைகள் திணைக்களத்திற்கு மொத்தம் 60,336 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. விண்ணப்பங்கள் செப்டம்பர் 7 முதல் 16 வரை ஏற்றுக்கொள்ளப்பட்டன.

2022(23) உயர்தரப் பரீட்சை முடிவுகள் செப்டம்பர் 4 அன்று இணையத்தில் வெளியிடப்பட்டன. மொத்தம் 232,797 பாடசாலை விண்ணப்பதாரர்களும் 31,136 தனியார் விண்ணப்பதாரர்களும் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

அவர்களில் 149,487 பாடசாலை விண்ணப்பதாரர்களும் 17,451 தனியார் விண்ணப்பதாரர்களும் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றுள்ளனர். (த)

## முல்லைத்தீவில் மீனவர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவனவீர்ப்புப் போராட்டமொன்று மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

வடமாகாணக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களுடைய அத்துமீறிய பிரவேசம் காணப்படுவதாகவும் இதனால் தமது தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாகவும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தியாவிற்குச் சென்று மீனவர் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகள் தொடர்பாகக் கதைப்பதில்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்தப் போராட்டத்தில் யாழ் மாவட்ட மீனவர்களும் பங்கு கொண்டிருந்தனர்.

போராட்டத்தின் நிறைவின்போது முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரிடம் ஜனாதிபதி மற்றும் கடற்றொழில் அமைச்சர் உள்ளிட்டோருக்கான மகஜரும் கையளிக்கப்பட்டது.

மீனவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக தாம் அறிந்துள்ளதாகவும், இது தொடர்பாக உரிய தரப்புகளுக்குத் தெரியப்படுத்துவதாகவும், இந்த மகஜர்களை உரியவர்களுக்கு அனுப்பி வைப்பதாகவும் மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார். (04)

## மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்குமாறு கோரி இலங்கை இராணுவத்தின் ஓய்வுபெற்ற புலனாய்வு அதிகாரி ஒருவரால் தாக்கல் செய்யப்பட்ட மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது. (த)




**விற்பனையாளர் தேவை**

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி – மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

**உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட**
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்

# அகில இலங்கை கர்நாடக இசை, பரதநாட்டியப் போட்டி யாழ் இந்து மகளிர் கல்லூரி 6 பிரிவுகளில் முதலாமிடம்

நடளாவிய ரீதியில் இடம்பெற்ற அகில இலங்கைக் கர்நாடக இசை, பரதநாட்டியப் போட்டிகளில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி 6 பிரிவுகளில் முதலாமிடத்தினையைம், ஒரு பிரிவில் இரண்டாம் இடத்தினையும் பெற்றுள்ளது.





# இளையோருக்கான தேசிய கரம் சுற்றுப்போட்டி யாழ் இந்து மாணவர்கள் முதல் முறையாக வெற்றி



இலங்கைக் கரம் சம்மேளத்தினால் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட தேசிய ரீதியிலான இளையோருக்கான கரம் சுற்றுப்போட்டியில் முதற் தடவையாக யாழ்ப்பாணம்இந்துக்கல்லூரி மாணவர்கள் வெற்றிகளைப் பெற்றுள்ளனர்.

115 மாணவர்கள் பங்குபற்றிய 15 வயதுப் பிரிவு ஒற்றையர் போட்டியில் க.பரியன் முதலாம் இடத்தையும், 95 மாணவர்கள் பங்குபற்றிய 13 வயதுப் பிரிவு ஒற்றையர் போட்டியில் ப.உபேந் இரண்டாம் இடத்தையும், 95 மாணவர் கள் பங்குபற்றிய 13 வயதுப் பிரிவு ஒற்றை யர் போட்டியில் ச. கர்ஷவர்த்தன் மூன் றாம் இடத்தையும் பெற்றுக் கொண் டுள்ளனர்.

# கிண்ணியா படகுப் பாதை விபத்து உயிரிழந்தோரின் நினைவுகூரல்



(ஹஸ்பர்)

கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகு பாதை விபத்தில் உயிர் நீத்தவர்களுக்கான துஆப் பிரார்த்தனையும் நினைவு கூறும் நிகழ்வும்நேற்றுக்காலை குறிஞ்சாக்கேணி பாலத்துக்கு அருகில் இடம்பெற்றன.

2021 ஆம் ஆண்டு நவம்பர் 23 ஆம் திகதி நடந்த படகுப் பாதை விபத்தில் ஐந்து மாணவர்களும்மூன்று பொதுமக்களுமாக மொத்தம் எட்டுப் பேர் உயிரிழந்தனர்.

அவர்களை நினைவுகூரும் இந்நிகழ்வின்போது கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன.

கிண்ணியா பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் நத்துவத்தில் புகாரி அரபிக் கல்லூரியின் மாணவர்களும், அல் அஸ்கர் மகா வித்தியாலய மாணவர்களும், அரசினர் ஆண்கள் வித்தியாலய மாணவர்கள், பிரதேச செயலகத்தின் அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள் பொதுமக்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 98 ஆவது அவதாரதின ஊர்வலம்



பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 98 ஆவது அவதாரதினமாகிய நேற்று (23) வியாழக்கிழமை காரைதீவு ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தால் ஒழுங்குங்கு செய்யப்பட்ட ஊர்வலமானது காரைதீவின்தேரோடும்வீதி வழியாக இடம் பெற்றது.

(படம்- வி.ரி.சகாதேவராஜா)



# தேர்தல் பிரசாரத்தின்போது மோடி குறித்து அவதூறு ராகுலுக்கு இந்தியத் தேர்தல் ஆணையம் நோட்டீஸ்



தேர்தல் பிரசாரத்தின்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி குறித்து அவதூறாகப் பேசியது தொடர்பாக காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்திக்கு இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

ராஜஸ்தான் சட்டப்பேரவைத் தேர்தல் நாளை (நவ.25) நடைபெறவிருக்கிறது. இதையொட்டி, கடந்த 22 ஆம் திகதி ராஜஸ்தானின் பார்மேர் மாவட்டம், பய்டோ பகுதியில் நடைபெற்ற காங்கிரஸ் பிரசாரக் கூட்டத்தில் அந்தக் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி பங்கேற்றார். இக் கூட்டத்தில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை அவமதிக்கும் வகையில் ராகுல் பேசியதாக பாஜக சார்பில் தலைமைத் தேர்தல் ஆணையத்திடம் புகார் கொடுக்கப்பட்டது.

அந்தப் புகாரில், தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பிரதமர் மோடி குறித்து ராகுல் காந்தி தவறாக பேசியுள்ளார். குறிப்பாக, 'பிரதமர் மோடி, தொழிலதிபர் அதானி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோர் பிக்பொக்கெட் கும்பலைச் சேர்ந்தவர்கள்.

அபசகுனம் பிடித்த பிரதமர் மோடி பார்க்கச் சென்றதால்தான் உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டியில் இந்தியா தோல்வி அடைந்தது.

கடந்த 9 ஆண்டுகளில் 15 தொழிலதிபர்களின் 14 லட்சம் கோடி கடனை மோடி தள்ளுபடி செய்துள்ளார், என்று அவதூறு ஏற்படுத்தும் வகையில் 3 பொய்யான குற்றச்சாட்டுகளை தெரிவித்துள்ள ராகுல் காந்தி மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும், என்று கூறப்பட்டுள்ளது.


இதைத் தொடர்ந்து, ராகுல் காந்திக்கு இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையம் நேற்று நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

அதில், இந்தியப் பிரதமர் மோடி குறித்த உங்கள் (ராகுல் காந்தி) கருத்து தேர்தல் நடத்தை விதிமீறல் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. பிரச்சாரத்தின்போது வேட்பாளர்கள், கட்சிகள் குறித்து அவதூறாகப் பேசக்கூடாது. ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுகளைச் சுமத்தக் கூடாது என்று நடத்தை விதிகளில் கண்டிப்புடன் கூறப்பட்டுள்ளது.

சுப்பிரமணியன் சுவாமி - மத்திய அரசு தொடர்பான வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு, டிவி தினகரன் தொடர்பான வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு ஆகியவற்றை உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறோம்.

உங்கள் மீது கூறப்பட்டுள்ள புகார் தொடர்பாக நவ.25 (நாளை) மாலை 6 மணிக்குள் பதில் அளிக்க வேண்டும். இல்லாவிட்டால், ஆணையம் நடவடிக்கை எடுக்கும், என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (04)

## நெதர்லாந்துப் பொதுத் தேர்தலில் தீவிர வலதுசாரி கொள்கையுடைய கீர்த் வில்டர்ஸ் கட்சிக்கு வெற்றி!



நெதர்லாந்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தீவிர வலதுசாரிக் கொள்கையுடைய கீர்த் வில்டர்ஸ் தலைமையிலான சுதந்திரக் கட்சி (பிவிவி) எதிர்பாராத வகையில் வெற்றி பெற்றுள்ளது.

150 இடங்களைக் கொண்ட அந்த நாட்டு நாடாளுமன்றக் கீழவையான பிரதிநிதிகள் சபைக்கு கடந்த புதன்கிழமை தேர்தல் நடைபெற்றது.

இதில், பிவிவி கட்சி 37 தொகுதிகளில் வெற்றி பெற்று அறுதிப் பெரும்பான்மை பெற்றது. இதற்கு முன்னர் வெறும் 17 இடங்களை மட்டுமே வைத்திருந்த அந்தக் கட்சியின் பலம் இரண்டு மடங்குக்கும் மேலாகும் என்று பெரும்பான்மையானவர்கள் எதிர்பார்க்கவில்லை.

தற்போது பதவி விலகும் பிரதமர் மார்க் ரூட் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சியான விவிடிக்கு வெறும் 20 இடங்கள் மட்டுமே கிடைத்தன.

அதையடுத்து, கீர்த் வில்டர்ஸ் தலைமையில் அடுத்த அரசு அமைவது உறுதியாகியுள்ளது.

தீவிர வலதுசாரி நிலைப்பாட்டைக் கொண்ட கீர்த் வில்டர்ஸ், இஸ்லாம் மதத்துக்கு எதிரான கடுமையான கருத்துகளை வெளிப்படுத்தி வருபவர்.

தேர்தல் நேரத்தில் இஸ்லாம் எதிர்ப்புப் பிரசாரத்தை அவர் முன்வைக்காவிட்டாலும், அதற்கு முன்னர் திருக்குரான், மசூதிகள், ஹிஜாப், முஸ்லிம் மதத் தலைவர்களுக்குத் தடை விதிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியது குறித்து தற்போது பல்வேறு தரப்பினரும் கவலை தெரிவித்துள்ளனர்.

கீர்த் வில்டர்ஸின் வெற்றியைத் தொடர்ந்து பிரான்ஸ் மற்றும் ஹங்கேரியின் வலதுசாரித் தலைவர்கள் அவருக்கு உடனடியாக வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

இருந்தாலும், ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த மற்றைய தேசத் தலைவர்களுக்கு கீர்த் வில்டர்ஸின் வெற்றி கவலையை ஏற்படுத்தும் என்று கூறப்படுகிறது.

ஏனெனில், தீவிர ஐரோப்பிய யூனியன் எதிர்ப்பாளரான அவர், தனது கட்சி ஆட்சிக்கு வந்தால் பிரெக்ஸிட்டைப் போல் 'நெக்ஸிட்' (ஐரோப்பிய யூனியனிலிருந்து நெதர்லாந்து விலகுவது) நடவடிக்கையை முன்னெடுக்கப்போவதாக சூளுரைத்துள்ளார்.

புதிய அரசை அமைப்பதற்காக ஒருமித்த கருத்துடைய கட்சிகளின் ஆதரவை தற்போது கீர்த் வில்டர்ஸ் கோரியுள்ளார். (04)

## இஸ்ரேல் - ஹமாஸ் தற்காலிகப் போர் நிறுத்தம் இன்று அதிகாலை முதல் நடைமுறையாகிறது



இஸ்ரேல் ராணுவத்துக்கும் ஹமாஸ் ஆயுதக் குழுவுக்குமிடையே ஏழு வாரங்களுக்கும் மேலாகத் தொடர்ந்துவரும் போரில், தற்காலிகப் போர் நிறுத்தம் இன்று (நவ.24) அதிகாலை முதல் அமலாகவுள்ளதாகக் கட்டார் நாடு தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் உடன்படிக்கையின் பேரில் இரு தரப்பும் பரஸ்பரம் கைதிகளை விடுவிக்கவும் நான்கு நாள்களுக்குப் போர் நிறுத்தத்துக்கும் ஒப்புக் கொண்டனர்.

நேற்று (வியாழக்கிழமை) தொடங்கவிருந்த போர் நிறுத்தம், காரணங்கள் வெளியிடப்படாது ஒத்தி வைக்கப்பட்டது. வெள்ளிக்கிழமை வரை போர் நிறுத்தம் அமலாக்கப்படாது, என இஸ்ரேல் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் இன்று (வெள்ளிக்கிழமை) இஸ்ரேல் உள்ளூர் நேரப்படி காலை 7 மணி முதல் போர் நிறுத்தம் அமலாகும் என கட்டார் தெரிவித்துள்ளது.

முதல்கட்டமாக, ஹமாஸ் குழுவால் கடத்திச் செல்லப்பட்ட 13 இஸ்ரேல் பிணைக்கைதிகள் வெள்ளிக்கிழமை பிற்பகலில் விடுவிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலாக இஸ்ரேல் விடுவிக்கும் பாலஸ்தீனர்களின் எண்ணிக்கை இன்று காலை வரை தெரிவிக்கப்படவில்லை. ஒரு பிணைக்கைதிக்கு 3 பாலஸ்தீன அகதிகள் வீதம் இஸ்ரேல் விடுவிக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். (04)

## சீனாவில் வேகமாகப் பரவி வரும் மர்மக் காய்ச்சல் தகவல் வழங்க உலக சுகாதார அமைப்பு கோரிக்கை



சீனாவில் வேகமாகப் பரவி வரும் மர்மக் காய்ச்சல் குறித்து ஜெனீவாவில் இயங்கி வரும் உலக சுகாதார அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், சீனாவில் புதிய வகை வைரசினால் ஏற்படும் காய்ச்சல் வேகமாகப் பரவி வருவதாகவும், அந்தக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களால் மருத்துவமனைகள் நிரம்பி வருவதாகவும் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், சீனக் குழந்தைகளுக்கிடையிலும் வகை கண்டறியப்படாத காய்ச்சல் பரவி வருவதாக சர்வதேச பரவல் நோய்க் கண்காணிப்பு அமைப்பும் எச்சரித்துள்ளது.

அந்த மர்மக் காய்ச்சலானது, சுவாசப் பாதை வழியாகப் பரவுகிறதா? என்பது குறித்து இதுவரை உறுதியாகத் தெரியவில்லை. இருந்தாலும் இந்தத் தகவல்கள் கவலை அளிப்பவையாக உள்ளன.

எனவே, இந்த நோய் தொடர்பான முழு விவரங்களை எங்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று சீன அரசிடம் வலியுறுத்தியுள்ளோம், என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சீனாவில் தற்போது புதிதாகப் பரவி வரும் மர்மக் காய்ச்சல், கொரோனாவைப் போல் உலகையே உலுக்கும் தொற்றுநோய்ப் பரவலாக உருவெடுப்பதற்கான வாய்ப்புள்ளதாக நிபுணர்களில் ஒரு பிரிவினர் எச்சரிக்கின்றனர்.

ஸார்ஸ், கொரோனா ஆகிய சர்வதேச நோய்த் தொற்றுகள், இதுபோன்ற வகை கண்டறியப்படாத காய்ச்சலாகத்தான் ஆரம்பமாகின என்பதை அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (04)

# மரண தண்டனையை எதிர்நோக்கியுள்ள 2 பிள்ளைகளின் தாயார் பொதுமன்னிப்பில் விடுவிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை



மரண தண்டனையை ஏதிர்நோக்கியுள்ள 2 பிள்ளைகளின் தாயான செ.சத்தியலீலாவை விடுதலை செய்வதற்குரிய பொதுமன்னிப்பை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துதவுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் குரலற்றவர்களின் குரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதிக்கான குறித்த கோரிக்கை கடிதத்தை வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இன்று (24) வெள்ளிக்கிழமை முற்பகல் குரலற்றவர்களின் குரல் அமைப்பினரால் நேரில் கையளிக்கப்பட்டுள்ளது. ஆளுநரின் சார்பில் ஆளுநர் செயலக மக்கள் தொடர்பு அதிகாரி குறித்த கோரிக்கை கடிதத்தினை பொறுப்பேற்றுக்கொண்டார்.

குறித்த கோரிக்கை கடிதத்தின் பிரதிகள் வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கு அனுப்பிய கோரிக்கை கடிதத்தில்,

14 ஆண்டுகளாக சிறைவாசம் அனுபவித்து விடுதலையான பின்பு, மரண தண்டனையை எதிர்நோக்கியுள்ள இரண்டு பிள்ளைகளின் தாயான தமிழ் அரசியல் கைதி தொடர்பானது.

மேற்படி, இல.6 இன் கீழ் 3, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரியை வாழ்விடமாகக் கொண்ட இரண்டு பிள்ளைகளின் தாயான செ.சத்தியலீலா என்பவர் 14 ஆண்டு காலம் தமிழ் அரசியல் கைதியாக வெலிக்கடைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கொழும்பு மேல் நீதிமன்றத்தினூடாக விடுவிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சட்டமா அதிபர்திணைக்களத்தின் மேல் முறையீடு காரணமாக இப் பெண்மணி மீண்டும் மரண தண்டணையை எதிர்நோக்கியுள்ளார்.

அதாவது, 2004 ஆம் ஆண்டு இடம் பெற்ற, அமைச்சர் டக்லஸ்தேவானந்தா மீதானகுண்டுத்தாக்குதல் தொடர்பில் சந்தேகத்தின் பெயரில் முன்பள்ளி ஆசிரியையான குடும்பத் தலைவி செ.சத்தியலீலா என்பவர் அவசரகாலச் சட்ட விதியின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவர், சுமார் 14 ஆண்டுகள் சிறையில் இருந்தபடி நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு முகம் கொடுத்து கடந்த ஜனவரி 14, 2018 அன்று கொழும்பு மேல் நீதிமன்றினால் “15வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டாண்டு கடூழிய சிறைத் தண்டணையுடன் சேர்த்து 25 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் செலுத்த வேண்டும்” என்கின்ற நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், மேல்நீதிமன்றம் வழங்கிய இவ்வழக்குத் தீர்ப்பில் திருப்தியுறாத சட்டமா அதிபர் அதனை ஆட்சேபித்து மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்தார்.

அதற்கமைய மேல்முறையீட்டு நீதிமன்றம் செ.சத்தியலீலா என்பவருக்கு ஜனவரி 23, 2023 அன்று மரண தண்டணைத் தீர்ப்பளித்துள்ளது.

நிரந்தர வருமானமின்மையால் வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்கித்தவிக்கும் சத்தியலீலாவால் தனக்கென ஒரு சட்டத்தரணியை அமர்த்துவதற்குக் கூட மிகச்சிரமப்படுகிறார்.

இவ்வாறான நிலையில்தான் இவர், இறுதி முயற்சியாக இலங்கை உயர் நீதிமன்றத்தின் வாசலை ஏகியிருக்கிறார்.

கௌரவ ஜனாதிபதியாகிய தாங்கள், சமூகங்களுக்கிடையிலான நல்லெண்ண சமிக்ஞையாக, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை உட்பட இன்னபிற விடயங்களிலும் கரிசனை கொள்வதாக நம்பப்படுகிறது.

இதேநேரம், அரச இயந்திரங்களின் செயற்பாடுகளோ முற்றிலும் மாறாக இருப்பது கவலையளிக்கிறது.

இவ்வழக்குடன் சம்பந்தபட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், சந்தேகநபரான “செ. சத்தியலீலாவை வழக்கிலிருந்து விடுவிப்பது தொடர்பில் தனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை” என்று, திறந்த மேல் நீதிமன்றத்தில் வெளிப்படையாகத் தெரிவித்திருந்த நிலையிலும் கூட இப்பெண்மணி இன்று சாவுத்தண்டணைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்.

ஆகவே, “14 வருடங்களாகக் குடும்பம், பிள்ளைகள், பெற்றோர், உறவுகள் என அனைவரையும் பிரிந்து சிறைக்குள் சொல்லொனாத் துன்பங்களை அனுபவித்து விட்டு விடுதலையாகி வெளியில் வந்த பின்பும் ஒரு மரண தண்டனைக் கைதியாக மீண்டும் சிறை செல்வதை என்னால் நினைத்துப் பார்க்க முடியாது. அதற்கு, உயிரை மாய்த்துக் கொள்வதே மேல்” என்ற நிலைப்பாட்டில் இருக்கும் இந்தப் பெண்மணிக்கு ஏதேனுமோர் அரசியல் தீர்மானத்தின் அடிப்படையில் பொது மன்னிப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துதவுமாறு கௌரவ ஜனாதிபதி அவர்களை, ஒரு சுயாதீன மனிதநேய அமைப்பாக நாம் கேட்டு நிற்கின்றோம், என்று கோரப்பட்டுள்ளது. (01)

## கேள்வி மற்றும் சந்தை நிலைவரத்திற்கு ஏற்ப கலால் உரிமக் கட்டணம் அதிகரிக்கப்படும்!



தற்போதைய கேள்வி மற்றும் சந்தை நிலைவரத்திற்கு ஏற்ப கலால் உற்பத்தி உரிமக் கட்டணம் அதிகரிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

கலால் உற்பத்தி உரிமம் நண்பர்களுக்கும் நெருங்கியவர்களுக்கும் வழங்கப்படுகின்றது என்று பலரும் கூறுகின்றார்கள்.

கலால் உற்பத்திக்கான அனுமதிப் பத்திரம் வழங்கும் போது அதற்கான கேள்விக்கு அமைவாகக் கட்டணம் அறவிடப்பட வேண்டும்.

இந்த வருடத்தில் அரச வருமானத்தில் 10 வீத்தை எட்ட முடியும். அதேபோன்று அடுத்த வருடத்தில் 12 வீதத்தை அடைய எதிர்பார்க்கின்றோம்.

இவை அனைத்தையும் இந்த நாட்டுக்காகவும் மக்களுக்காகவுமே முன்னெடுக்கின்றோம்.

10 வருடங்களுக்கு மேலாக கலால் உரிம அனுமதிப் பத்திரத்திற்கான கட்டணம் மாற்றப்படவில்லை.

ஆகவே, தற்போதை கேள்வி மற்றும் சந்தைக்குப் பொருந்தும் வகையில் கலால் உரிம அனுமதிப் பத்திரத்திற்கான கட்டணம் அதிகரிக்கப்பட வேண்டும்.

இவ்வாறான சாதகமான காரணிகளே இம்முறை வரவு செலவு திட்டத்தில் காணப்படுகின்றன, எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அடுத்த வருடம் 53 நீதிபதிகளுக்கு இடமாற்றம்

53 மாவட்ட நீதிபதிகள் மற்றும் மஜிஸ்திரேட்டுகள் அடுத்த வருடம் இடமாற்றம் செய்யப்பட உள்ளதாக நீதிச் சேவை ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதற்கமைய 26 மாவட்ட நீதிபதிகள் மற்றும் 27 மாஜிஸ்திரேட்டுகள் சேவைத் தேவைகளுக்கு ஏற்ப இடமாற்றம் செய்யப்பட உள்ளனர் எனவும் அறியவருகின்றது.

இந்த இடமாற்றங்கள் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்படும் என அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (ரெந-44)



# மண்டூரில் பக்திப் பாடல் இசைத்தட்டு வெளியீடு

(வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான் நிலப்பரப்பில் எல்லைக் கிராமமான மண்டூர் நாகஞ்சோலை மாணிக்கப் பிள்ளையார் ஆலய கும்பாபிசேகத்தை முன்னிட்டு நான்கு பாடல்கள் அடங்கிய இசைத்தொகுப்பு ஒன்று வெளியீடு செய்யப்பட்டது.

நாகஞ்சோலை கலை எழுச்சி மன்றத்தின் தயாரிப்பில் ட.ரீ.எஸ் படைப்பகத்தின் வெளியீடாக வெளிவந்த இசைத்தட்டில், மாணிக்கப்பிள்ளையார் புகழ் பாடும் கும்பிப் பாடலை நிஜந்தன் மற்றும் சுலக்சனா இணைந்து எழுதி, டினேஸ்குமார் மற்றும் லுக்க்ஷா ஆகியோர் பாடியுள்ளனர்.

இரண்டாவது பாடலான "நாகர் பூமி.." என ஆரம்பிக்கும் வரலாறு சுமந்த பாடலுக்கு காண்டீபனின் வரிகளில் டினேஸ்குமார் குரல் வழங்கியுள்ளார்.

மூன்றாவதாக, "மதலை மொழியேற்றி.." என ஆரம்பிக்கும் பிள்ளையார் புகழிசைக்கும் பாடல் வரிகளை கிலசன் வடித்துள்ளதுடன் ஜெயபிருந்தாவனி பாடலைப் பாடியுள்ளார்.



இசைத்தட்டின் நான்காவது பாடலை டினேஸ்குமார் வரிகளில் பிருந்தாபன் மற்றும் ஜெயநளினி ஆகியோர் பாடியுள்ளனர்.

இந்தப் பாடல்கள் கொண்ட இறுவட்டு ஆலய முன்றலில் குருமார்கள், ஆலய பரிபாலன சபையினர், நாகஞ்சோலை கலை எழுச்சி மன்றத்தினர், ட.ரீ.எஸ் படைப்பகத்தினர் மற்றும் பக்தர்களின் பங்குபற்றுதலுடன் வெளியீடு செய்யப்பட்டது.

நாகஞ்சோலை மாணிக்கப் பிள்ளையாரில் புகழிசைக்கும் பாடல் தொகுப்பினை ட.ரீ.எஸ் படைப்பகத்தினரின் வலையொளிப் பக்கத்தினூடாக கேட்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

# புலமைப் பரிசில் பரீட்சையில் வில்வெளி முஸ்தபா வித்யாலய மாணவிக்கு 155 புள்ளிகள்



(ஹஸ்பர் )

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் கிண்ணியா வலயத்துக்குட்பட்ட வில்வெளி முஸ்தபா வித்தியாலயத்தைச் சேர்ந்த பாத்திமா மின்ஹா 155 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

இவர் கிண்ணியா வில்வெளி 1 ஐச் சேர்ந்த மின்சாத், சிஜான தம்பதிகளின் புதல்வி ஆவார்.

# திருகோணமலை தொழிநுட்பக் கல்லூரியில் மாணவர்களுக்காக வழிகாட்டல் நிகழ்ச்சி



(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் கல்வி பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சி நேற்று (23) திருகோணமலை தொழிநுட்பக் கல்லூரியில் நடைபெற்றது.

இத்தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சியானது 2023 ஆம் ஆண்டு திருகோணமலை தொழிநுட்பக் கல்லூரியில் கற்கை நெறியைப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்காக நடாத்தப்பட்டது.

எதிர்காலத் தொழில் முயற்சிகள், ஏனைய உயர்கல்வி வாய்ப்புகள், வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் தொடர்பான பல விடயங்கள் இதன்போது வளவாளர்களினால் தெளிவூட்டப்பட்டன.

இந்நிகழ்வில் திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்கல்வி மாவட்ட இணைப்பாளர் க.மதுரன், மனிதவள அபிவிருத்தி மாவட்ட இணைப்பாளர் திருமதி.ஜெசினா பௌமி, மொறவெவ பிரதேச செயலக திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.முகுந்தன் மற்றும் மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.






## திருமலை மாவட்டத்தின் அனர்த்த முன்னாயத்தம்

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டச் செயலகம் மற்றும் திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட வெள்ள அனர்த்த முன்னாயத்த மாவட்ட குழுக்கூட்டமானது நேற்று (23) மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் நடைபெற்றது.

வருடாந்தம் நவம்பர் மாதம் முதல் பெப்ரவரி மாதம் வரை இடம்பெறும் வடகிழக்கு பருவமழை காலத்தில் திருகோணமலை மாவட்டத்தில் குறிப்பிட்ட பிரதேசங்களில் வெள்ள நிலைமைகள் தொடர்ச்சியாக காணப்படுகின்றன. கூடுதலாக, தற்போது நிலவும் இரண்டாவது பருவமழை காலநிலையானது ஏற்கனவே திருகோணமலை மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க வெள்ள அபாயத்தை அதிகரித்துள்ளது.

இந்தப் பின்னணியில், மழைக் கால அனர்த்தங்களினால் பொது மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைப்பதற்கு முன்னோட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து பிரதேச ரீதியாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் குகதாஸ் சுகுணதாஸி னால் கலந்துரையாடப்பட்டது.

இக்கூட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.சுதாகரன், மாவட்ட பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், மாவட்ட அரச திணைக்கள பிரதானிகள், உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதானி கள், முப்படையினர் மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## சூரிய மின் சக்திக் கட்டமைப்பு பொருத்த விபரங்கள் சேகரிப்பு

(நூருல் ஹுதா உமர்)

பள்ளிவாசல்கள், பள்ளி வாசல்களுடன் இணைந்து செயற்படும் அரபுக் கல்லூரிகள், மத்ரசாக்கள் மற்றும் ஏனைய கல்வி நிலையங்களுக்கு அல்லது தனித்து இயங்கும் அரபுக் கல்லூ ரிகள், மத்ரசாக்களுக்கு சூரிய மின் சக்தி கட்டமைப்பை பெற்றுக் கொள்வதற்கு தேவையான தகவல்களை வழங்குமாறு சகல பள்ளிவாசல், தக்கியாக்கள், சாவியாக்களின் நம்பிக்கையாளர்கள், நம்பிக்கைப் பொறுப்பாளர்கள், சகல அரபுக் கல்லூரிகள், மத்ரசாக்களின் அதிபர்கள் மற்றும் பொறுப்பாளர்களை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

வழங்கப்பட்டுள்ள படிவத்திற்கு அமைய பூரணப்படுத்தி எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் (எம்.ஐ.ஹியாஸ் அபிவிருத்தி உத்தியோகத்தர்) 0715454486 எனும் வாட்சப் இலக்கத்திற்கு அல்லது திணைக்கள முகவரிக்கு அல்லது director@muslimaffairs.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளரின் சார்பில் உதவிப் பணிப்பாளர் எம்.எஸ். அலா அஹமட் கேட்டுக்கொண்டுள்ளார்.

# தாய்லாந்து உலக இந்து காங்கிரசின் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக செந்தில் தொண்டமான்




(நூருல் ஹுதா உமர், ஹஸ்பர்)

தாய்லாந்தில் இடம்பெறும் உலக இந்து காங்கிரஸ் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான செந்தில் தொண்டமான் பங்கேற்கிறார்.

தாயலாந்துக்கு நேற்று உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள செந்தில் தொண்டமான், இன்று தாய்லாந்தில் நடைபெற உள்ள நிகழ்வில் பங்குபற்றுகிறார்.

இந்நிகழ்வில் இந்தியா, அமெரிக்கா, நோர்வே, கனடா, ஜெர்மன், அவுஸ்ரேலியா, கென்யா, கட்டார் போன்ற நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த இராஜதந்திரிகள், அரசியல் தலைமைகள், பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

## உளவுச் செயற்கைக்கோளை ஏவுவதற்கு வட கொரியாவுக்கு ரஷ்யா உதவியது!

### தென் கொரிய உளவு அமைப்பு தகவல்



தனது உளவுச் செயற்கைக்கோளை வட கொரியா வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தியதற்கு ரஷ்யா உதவியிருக்கலாம் என்று தென் கொரிய உளவு அமைப்பினர் கூறியுள்ளனர்.

இது குறித்து அந்த நாட்டு நாடாளுமன்றுக்கு அவர்கள் சமர்ப்பித்துள்ள அறிக்கையில், உளவுச் செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தும் முயற்சியில் ஏற்கெனவே 2 முறை தோல்வியடைந்த வட கொரியா, அந்த முயற்சியில் புதன்கிழமை வெற்றியடைந்ததற்கு ரஷ்யா அளித்த தொழிநுட்ப உதவி காரணமாக இருக்கலாம்.

அந்தச் செயற்கைக்கோளைச் செலுத்துவதற்கான 'சோலிமா-1' என்ற ரொக்கெட்டில் இருந்த தொழிநுட்பக் குறைபாட்டைச் சரிசெய்ய ரஷ்யா அவர்களுக்கு உதவியிருக்கலாம்.

வட கொரியாவின் விண்வெளித் திட்டங்களுக்கு உதவப் போவதாக ரஷ்ய அதிபர் புடின் ஏற்கெனவே தெரிவித்துள்ளார், என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (04)

## கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் மாணவி சிங்களப் பேச்சுப் போட்டியில் தேசிய மட்டத்திற்கு தெரிவு

(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் தரம் 6 இல் தமிழ் மொழி மூலம் கல்வி கற்கும் மாணவி எம். நசீம் ஆயிஷா மனால், இரண்டாம் மொழி சிங்களப் பேச்சுப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும், மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்று தற்போது தேசிய மட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தமிழைத் தாய் மொழியாகக் கொண்டு கல்வி கற்கும் மாணவி எம்.நசீம் ஆயிஷா மனாலைப் பயிற்றுவித்த ஆசிரியர்களான பவானி மற்றும் பரீன் இல்ஹாம் ஆகியோருடன் பெற்றோர்களான எம்.நசீம், எம்.ஏ.இஸட் மபாஸா ஆகியோருக்கும் பாடசாலை நிர்வாகம் மற்றும் பாடசாலையின் அபிவிருத்திக் குழு சார்பாக நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதாக



அதிபர் முஸ்தபா அன்சார் குறிப்பிட்டார்.

## இந்தோனேசியாவில் சிறுதானிய விழிப்புணர்வு உணவுத் திருவிழாவை இந்தியா நடாத்துகிறது

சிறுதானியங்கள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்தோனேசியாவில்உணவுத்திருவிழாவுக்கு இந்தியா ஏற்பாடு செய்துள்ளது.

இதுகுறித்து ஆசியானுக்கான இந்தியத் தூதர் ஜெயந்த் கோப்ரகடே தகவல் வழங்குகையில், ஆசியானுக்கான கூட்டமைப்பில் இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, புருனே, வியட்நாம், லாவோஸ், மியான்மர், கம்போடியா ஆகிய 10 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.




இந்த நாடுகளில் சிறுதானியங்கள் சார்ந்த பொருட்களுக்கான சந்தைகளை உருவாக்கவும், அந்நாட்டு மக்களின் சிறந்த உணவுக்கான தேர்வாக சிறுதானியத்தை மாற்றிஅமைக்கும்வகையில்விழிப்புணர்வை உண்டாக்கவும் இந்தியா இந்த உணவுத் திருவிழாவுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

இந்தத் திருவிழா 5 நாட்கள் வரை நடைபெற உள்ளது. ஆசியானுக்கான இந்தியத் தூதரகம், வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் இணைந்து இந்த உணவுத் திருவிழாவை ஏற்பாடு செய்துள்ளன.

இந்தியப் பிரதமர் மோடி தலைமையில் கடந்த செப்டம்பர் 7 ஆம் திகதிஆசியான் - இந்தியா மாநாட்டின்போது உணவுப் பாதுகாப்பு பற்றிய கூட்டறிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்த நிலையில், இரண்டு மாதங்களிலேயே சிறுதானியத் திருவிழாவை நாங்கள் ஏற்பாடு செய்து காட்டியுள்ளோம். உணவு பாதுகாப்பை உறுதிசெய்வதில் சிறுதானியங்களின் பங்கு மிக முக்கியமானதாக விளங்குகிறது, என்று தெரிவித்திருக்கிறார். (04)

## கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியில் இராணுவத்தினரின் துப்புரவுப் பணி



கிளிநொச்சியின் இரத்தினபுரம் பகுதியில் அமைந்துள்ள பிரதான கால்வாய்ப் பகுதியிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் இராணுவத்தினர் இன்றைய தினம் துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

டெங்கு பரவக்கூடிய இடங்கள், தண்ணீர் தேங்கி நிற்கும் பகுதிகளில் இந்தத் துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. (02)

## வீதி விபத்தில் வவுனியாவில் ஒருவர் பலி

திருகோணமலைப் பகுதியில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த பார ஊர்தி ஒன்றுடன் முதியவர் ஒருவர் வாகனத்தின் மோதுண்ட நிலையில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து வவுனியா நகரப் பகுதியில் இன்றைய தினம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் நடுக்குளம் பகுதியைச் சேர்ந்த கும்புகே பண்டார என்ற 71 வயதுடைய முதியவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்த முதியவரின் சடலம் வவுனியா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. விபத்தை ஏற்படுத்திய பார ஊர்தியின் சாரதி பொலிசாரால் கைது செய்யப்பட்



டுள்ளார். (02)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.11.2023இல் வெளியிடப்பெற்றது.